Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120344

1. District : மாவட்டம் விழுப்புரம் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 02 | Date: நாள் 03.03.2025

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act | Sections பிரிவுகள்: Sec - 7
   (ii) Act சட்டம்: amended Act - 2018 | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: BNSS | Sections பிரிவுகள்: Sec - 106
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 03.03.2025 | Date from : நாள் முதல் ~~16-10~~ | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 16.10 | Time to : நேரம் வரை 22.00
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.03.2025 | Time : நேரம் 23.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம் 23.30

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 13 km வடக்கில்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி — சார்பதிவாளர் அலுவலகம், விக்கிரவாண்டி.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — ரு. சித்ராமன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி — துணைக் கண்காணிப்பாளர், மாவட்ட கண்காணிப்பு அலுவலகம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திருமதி. ரா. சூர்யா, சார்பதிவாளர், விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகம் 2. கணினி இயக்குபவர் ரெஜினா. த. சரண்யா 3. தனிநபர்கள் திருமதி. கலையரசி க/பெ தாமரைச்செல்வன் பெரியதச்சூர் 4. திரு. சந்திரசேகர் த/பெ ரங்கநாதன், வானூர், [illegible] 5) மாதவன் த/பெ கண்ணையன், வடமங்கலம், வழுப்புரம். 6. திரு. சரவணன் த/பெ ஏழுமலை, வீடூர் 7) பார்த்தசாரதி த/பெ பாலையன், அய்யங்கோவில்பட்டு 8. திரு. சுகந்த் த/பெ சம்பந்தமூர்த்தி, அட்டேரிபாளையம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

அம்மா,

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

3/3/25 | 03/03/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் [illegible]
Rank: நிலை [illegible] No. எண் [illegible]

பணிந்து அனுப்பப்படுகிறது. அம்மையீர், நான் இன்று 03.03.2025-ம் தேதி, 23.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் G.ராணி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 03.03.2025-ம் தேதி 23.30 மணிக்கு விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 02/2025/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர்:திரு.பூ.சீத்தாராமன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.பெறுநர்:காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் மாவட்டம். ந.க.எண்.அ/153/2025, நாள் 03.03.2025 ஐயா, பொருள் திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகம் - 03.03.2025 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக:- பார்வை திடீர் ஆய்வு மகஜர் நாள்: 03.03.202503.03.2025-ம் தேதி ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.பூ.சீத்தாராமன், ஆகிய நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மூலமும், புரோக்கர்கள் மூலமும் இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.Gஅழுகேசன், காவல் துணை கண்காணிப்பாளர், விழுப்புரம் அவர்களிடம், விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 16.10 மணியளவில் விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தினுள் சென்று அங்கிருந்தவர்களிடமும் சார்பதிவாளர் அவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, பின்னர் விசாரித்து தெரிந்த 1) திருமதி.ரா.சூர்யா, சார்பதிவாளர், விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகம், அவர்கள் வடக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவருக்கு இடது பக்கத்தில் 2) டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி. வசந்தி க.பெ குமார் என்பவர் சார்பதிவாளருக்கு இடது பக்கத்தில் வடக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்தார்.3)அலுவலக உதவியாளர் திரு.ம.வெங்கடேசன் த.பெ மண்ணாங்கட்டி என்பவர் சார்பதிவாளருக்கு வலது புறத்தில் உள்ள அறையில் மேற்கு நோக்கியவாறு போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவருக்கு இடதுபுறத்தில் 4)பயிற்சி சார்பதிவாளர் செல்வி ச.மோனிகா த.பெ சங்கரலிங்கம், என்பவர் அமர்ந்திருந்தார். 5)கேமரா ஆபரேட்டர் செல்வி.த.சுகன்யா என்பவர் சார்பதிவாளருக்கு பின்புறம் உள்ள கணினி அறையில் வடக்கு நோக்கியவாறு போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். சார்பதிவாளர் இருக்கைக்கு நேர்எதிரே தனிநபர்கள் 6) திருமதி.கலையரசி க.பெ அமரஜோதி, கட்டபொம்மன் தெரு, பெரியதச்சூர் விழுப்புரம் மாவட்டம் 7) அமரஜோதி, த.பெ மாயகிருஷ்ணன், கட்டபொம்மன் தெரு, பெரியதச்சூர் விழுப்புரம் மாவட்டம் 8)திரு.உத்திரவேல் த.பெ ரங்கநாதன், பிள்ளையார் கோயில் தெரு, விநாயகபுரம், அதனூர், விக்கிரவாண்டி வட்டம் 9) திரு.மாதவன் த.பெ கண்ணையன், வண்டிமேடு, விழுப்புரம் 10)திரு.சரவணன், த.பெ ஏழுமலை, வீடுர், திண்டிவனம் வட்டம். 11)திரு.பரந்தாமன் த.பெ பாவாடை, வழுதரெட்டி, விழுப்புரம் 12)திரு.சுரேஷ் த.பெ சுப்பிரமணியன், ஓட்டேரிபாளையம்,

விழுப்புரம் வட்டம்13) திரு.வேதகிரி த.பெ பச்சையப்பன், P.S பாளையம், மன்னடிப்பட்டு கொம்யூன், புதுச்சேரி ஆகியோர் நின்றிருந்தனர். அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவரவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ்கண்டவகையில் கணக்கில் வராத தொகை கைப்பற்றப்பட்டது. <u>திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்:</u>1)விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் திருமதி.ரா.சூர்யா, சார்பதிவாளர், விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகம் அவர்களை சோதனை செய்தபோது அவரது கைப்பையில் பணம் ஏதும் இல்லை. ஆனால் இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் ரூபாய்.500/- இருந்தது. இது முன்னுக்குபின் முரணாக உள்ளது.2)டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி. வசந்தி க.பெ குமார் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதிலும் தொகை எதுவும் பதிவு செய்யவில்லை. 3)அலுவலக உதவியாளர் திரு.ம.வெங்கடேசன் த.பெ மண்ணாங்கட்டி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.800/- இருந்தது. அப்பணத்தினை இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் ரூபாய்.800/- சரியாக இருந்தது. 4) பயிற்சி சார்பதிவாளர் செல்வி ச.மோனிகா த.பெ சங்கரலிங்கம், என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.100/- இருந்தது. அப்பணத்தினை இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் ரூபாய்.100/- சரியாக இருந்தது. 5)கேமரா ஆபரேட்டர் செல்வி.த.சுகன்யா என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.150/- (100X2, 10X2) இருந்தது. அப்பணத்தினை இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் ரூபாய்.220/- என குறிப்பிடப்பட்டு இருந்தது. இது முன்னுக்குபின் முரணாக இருந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 6)தனிநபர் திருமதி.கலையரசி க.பெ அமாஜோதி, என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.63,500/- (500X 127)இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 7)தனிநபர் அமரஜோதி, த.பெ மாயகிருஷ்ணன், என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.30,000/- (500x60) இருந்தது. மேற்படி தொகை குறித்து தக்க முகாந்திரம் தெரிவித்ததால் மேற்படி தொகை அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. 8)தனிநபர் திரு.வேதகிரி த.பெ பச்சையப்பன், என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.2,65.000/- (500x530) இருந்தது. மேற்படி தொகை குறித்து தக்க முகாந்திரம் தெரிவித்ததால் மேற்படி தொகை அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. 9)தனிநபர் திரு.உத்திரவேல் த.பெ ரங்கநாதன், என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,00,000/- (500x200) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 10) தனிநபர் திரு.மாதவன் த.பெ கண்ணையன், என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.23,200/-(500X8, 200X45, 100X102) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 11)தனிநபர் திரு.சரவணன், த.பெ ஏழுமலை என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.6,500/- (500X13) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது .11)தனிநபர் திரு.பரந்தாமன் த.பெ பாவாடைஎன்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.13,200/-(500X19, 200X12, 100X13)இருந்தது. மேற்படி

தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 11)தனிநபர் திரு.சுரேஷ் த.பெ சுப்பிரமணியன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.7,500/- (500 X 15) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்பு, மேலும் விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தின் உட்புறத்தினை சோதனை செய்ததில் கைப்பற்றக்கூடிய பொருளோ, பணமோ ஏதும் இல்லை. விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தின் உட்புறத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட பணமானது

| வ.எண் | கைப்பற்றப்பட்ட பணம் |
|---|---|
| 1) | ரூ.220/- |
| 2) | ரூ.63,500/- |
| 3) | ரூ.1,00,000/- |
| 4) | ரூ.23,200/- |
| 5) | ரூ.6,500/- |
| 6) | ரூ.13,200/- |
| 7) | ரூ.7,500/- |
| ஆக மொத்தம் | ரூ.2,14,120/- |

இந்த திடீராய்வின்போது, விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தின் உட்புறத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான ரூ.2,14,120/- (ரூபாய் இரண்டு லட்சத்து பதிநான்காயிரத்து நூற்று இருபது மட்டும்) ஆனது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெறுவதற்காக இருக்கக்கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான G கணக்குப் பதிவேடு, மற்றும் H கணக்குப் பதிவேடு, ஆகியவற்றை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் விசாரணைக்காக விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2025, தனி நபர் ரொக்க பதிவேடு-2025, வருகை பதிவேட்டின் தணிக்கை பதிவேடு-2025, தாமத வருகைப்பதிவேடு-2025 மற்றும் இயக்கப்பதிவேடு-2025 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு அலுவலகத்தில் இருந்த சார்பதிவாளர், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு தொடர்பாக பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்க வேண்டிய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தின் விபரம் அலுவலகத்தில் வைக்கப்படவில்லை. விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தின் இருந்தவர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் பெண் காவலர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல உதவி ஆய்வாளர் திரு.அ.சக்கரபாணி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 03.03.2025-ம் தேதி சுமார் 16.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 03.03.2025-ம் தேதி சுமார் 22.00

மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட இலஞ்ச தொகை மற்றும் திண்டிவனம் இணை சார்பதிவாளர்-1 அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத தொகையாக **ரூ.2,14,120/-** (ரூபாய் இரண்டு லட்சத்து பதிநான்காயிரத்து நூற்று இருபது மட்டும்) கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1)திருமதி.ரா.சூர்யா, சார்பதிவாளர், விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகம், 2)கேமரா ஆபரேட்டர் செல்வி.த.சுகன்யா, தனிநபர்கள் 3) திருமதி.கலையரசி க.பெ அமரஜோதி, கட்டபொம்மன் தெரு, பெரியதச்சூர் விழுப்புரம் மாவட்டம் 4)திரு.உத்திரவேல் த.பெ ரங்கநாதன், பிள்ளையார் கோயில் தெரு, விநாயகபுரம், அதனூர், விக்கிரவாண்டி வட்டம் 5) திரு.மாதவன் த.பெ கண்ணையன், வண்டிமேடு, விழுப்புரம் 6)திரு.சரவணன், த.பெ ஏழுமலை, வீடுர், திண்டிவனம் வட்டம். 7)திரு.பரந்தாமன் த.பெ பாவாடை, வழுதரெட்டி, விழுப்புரம் 8)திரு.சுரேஷ் த.பெ சுப்பிரமணியன், ஒட்டேரிபாளையம், விழுப்புரம் வட்டம் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, sd(xxxx) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.இணைப்பு:1)திடீர் ஆய்வு மகஜர் நாள். 03.03.2025. 2)ரொக்கம் ரூபாய்- ரூ.2,14,120/- 3)8நபர்களின் வாக்குமூலங்கள்.4)விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2025, 5.தனி நபர் ரொக்க பதிவேடு-2025, 6.வருகை பதிவேட்டின் தணிக்கை பதிவேடு-2025, 7.தாமத வருகைப்பதிவேடு-2025 மற்றும் 8.இயக்கப்பதிவேடு-2025.

Madam,

Received the above computer typed complaint on 03.03.2025 at about 23.00 hrs. Hence, I registered a case in Villupuram Vigilance and Anti-Corruption Cr.No.02/2025/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS at 23.30 hrs today on 03.03.2025.

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

03/03/2025

(G.Alagesan)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.